## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2023 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.710/2017

வா.சா.1 சந்தோஷ்

**1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

தாவாச் சொத்து எனக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்டதாகும். என்னுடைய தாத்தாவின் அப்பா பெயர் காளியப்ப கவுண்டர் என்றால் சரிதான். காளியப்ப கவுண்டருக்கு 3 ஆண்கள், 1 பெண் மக்கள் என்றால் சரிதான். அவர்கள் பெயர் அத்தப்பன், கொழந்தசாமி, ராமசாமி ஆகும். 1 ம் பிரதிவாதி பழனியம்மாள் காளியப்ப கவுண்டரின் ஒரே மகள் என்றால் சரிதான். அத்தப்பன் என்பவரது மகன் தான் 2 ம் பிரதிவாதி என்றும், அவர் எனது அப்பா என்றால் சரிதான். என் அப்பாவுக்கு கிருஷ்ணவேணி, சகுந்தலா ஆகிய இரண்டு சகோதரிகள் உள்ளார்கள் என்றால் சரிதான். நானும், ஷோபனா என்பவரும் என் அப்பாவிற்கு இரண்டு பிள்ளைகள் என்றால் சரிதான். அ.வ.எண்.327/1986 என்ற வழக்கை என் தாத்தாவின் அப்பா காளியப்ப கவுண்டர் என்பவர் பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருந்த போது காளியப்ப கவுண்டர் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். காளியப்ப கவுண்டர் எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட உயில் சாசனத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் 1 ம் பிரதிவாதியான பழனியம்மாள் என்பவர் அ.வ.எண்.327/1986 வழக்கில் 2 ம் வாதியாக சேர்க்கப்பட்டார் என்றால் சரிதான். அந்த வழக்கானது விசாரணையின் முடிவில் இவ்வழக்கின் 2 ம் பிரதிவாதிக்கு தாவாச் சொத்தில் 1/4 பாகம் பாத்தியம் என்று முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அ.வ.எண்.327/1986 வழக்கின் என் தாத்தா அத்தப்பன், என் அப்பா ராஜு என்பவரும் பிரதிவாதிகளாக காட்டப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அ.வ.எண்.327/1986 வழக்கின் தீர்ப்பை எதிர்த்து என் தாத்தா அத்தப்பன், என் அப்பா ராஜு மற்றும் அவரது சகோதரர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு வழக்கு.923/1992 என்ற வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருந்த போது என் தாத்தா அத்தப்பன் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். என் தாத்தா காலமான பிறகு என் தாத்தாவின் பெண்

வாரிசுகளான கிருஷ்ணவேணி மற்றும் சகுந்தலா ஆகியோர்கள் வாரிசுகளாக சேர்க்கப்பட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக அ.வ.எண்.327/1986 மற்றும் அதன் பேரில் ஏற்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண்.923/1992 மற்றும் நிறைவேற்று மனுவில் கண்டுள்ள விபரங்கள் முழுவதும் தெரிந்து கொண்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேனா அல்லது விபரங்கள் தெரிந்து கொள்ளாமலேயே இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2017-ல் மேற்கண்ட வழக்கு விபரங்கள் எல்லாம் தெரிந்து கொண்டு தான் இந்த வழக்கு தாக்கல் செய்தேன். சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த மேல்முறையீட்டு வழக்கு எண்.923/1992 வழக்கில் என்னையும் ஒரு தரப்பினராக சேர்க்க கோரி இடையீட்டு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த இடையீட்டு மனுவில் சொல்லியுள்ள விபரங்கள் எல்லாம் சரியானது தானா என்றால் சரிதான். மேல்முறையீட்டு வழக்கில் என்னையும் தரப்பினராக சேர்க்கப்பட்ட பிறகு மேல்முறையீட்டு வழக்கானது என்னால் நடத்தப்பட்டு முடிவுக்கு வந்தது என்றால் சரிதான். மேல்முறையீட்டு வழக்கானது கடந்த 31.10.2006 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டு அ.வ.எண்.327/1986 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை உறுதி செய்யப்பட்டது என்றால் தற்போது தான் அந்த விபரம் தெரிய வந்தது. சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்த பிறகு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.327/1986 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட முதல் நிலைத் தீர்ப்பாணையின் பேரில் 1 ம் பிரதிவாதி இறுதி நிலைத் தீர்ப்பாணை கோரி மனு தாக்கல் செய்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த போது தெரிந்து கொண்டேன். இறுதி நிலைத் தீர்ப்பாணையின் அடிப்படையில் இந்த வழக்கின் 1 ம் பிரதிவாதி நிறைவேற்று மனு எண்.54/2012 மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த நிறைவேற்று மனு என்னிடம் காட்டப்படுவது தான், அது **பி.வா.த.சா.ஆ.1** ஆகும். இறுதிநிலைத் தீர்ப்பாணையில் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை வரைபடத்தை இந்த வழக்கில் ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிக்கை, வரைபடம் ஒருதலைபட்ச தீர்ப்பாகும். இறுதிநிலைத் தீர்ப்பாணை கோரி தாக்கல் செய்த மனுவிலும், நிறைவேற்று மனு எண். 54/2012 லும், என் தகப்பனார் வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி இருந்த விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தெரிந்து கொண்டேன். நிறைவேற்று மனு எண்.54/2012 மனுவில் நான் நி.வே.இ.ம.எண்.27/2022 என்ற மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது மேற்படி நிறைவேற்று மனுவில் என்னால் தாக்கல் செய்யப்பட்ட நி.வே.இ.ம.எண்.27/2022-ன் சான்று நகல் என்றால் சரிதான், அது

**பி.வா.த.சா.ஆ.2** ஆகும். நி.வே.இ.ம.எண்.27/2022-ல் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். அது **பி.வா.த.சா.ஆ.3** ஆகும். நி.வே. இ.ம.எண்.27/2022-ன் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நகல் தான் என்னிடம் காட்டப்படுவது தான், அது **பி.வா.த.சா.ஆ.4** ஆகும். நி.வே.இ.ம.எண்.27/2022-ல் தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, மேல்முறையீடு செய்துள்ளேன். நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றும், இந்த வழக்கிற்காக மேல்முறையீடு செய்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்த பிறகு தாவாச் சொத்தில் ஒரு அமலானந்தன், ஜாகீர் உசேன், செந்தில் குமார் ஆகியோர்கள் வாடகைதாரர்களாக இருப்பதாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாடகைதாரர்கள் நி.வே.ம.எண்.54/2012-ல் தாக்கல் செய்த மனு நகல் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் அவர்கள் தான் எனக்கு கொடுத்தார்கள். மேற்படி அமலானந்தன் தாக்கல் செய்த மனுவின் சான்று நகல் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான், அது **பி.வா.த.சா.ஆ.5** ஆகும். செந்தில்குமார் என்பவர் தாக்கல் செய்த மனுவின் சான்று நகல் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான், அது **பி.வா.த.சா.ஆ.6** ஆகும். அமலானந்தன் என்பவர் தாக்கல் செய்த மனுவில் 1ம் பிரதிவாதி எதிருரை தாக்கல் செய்து, அந்த மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், அதன் நகல் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

**1ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**